26.11.2025

O.S.No. 103/2013

PW1– சாகுல் ஹமீது – த/பெ. முகம்மது ஷா

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 26.11.2025

குறுக்கு விசாரணை தொடர்ச்சி : ( பிரதிவாதி தரப்பில்)

18. 07.02.2003 தேதி 1ம் பிரதிவாதி O.S.முகம்மது Shacrusher தொழிலில் பங்குதாராக இணையும்போது தொழில் நடந்து வந்தது. அன்றைய தேதியில் 2ம் பிரதிவாதி தனது கணக்குகள் அனைத்தையும் முடித்துவிட்டுதான் கூட்டாண்மையில் இருந்து வெளியேறிவிட்டார் என்றால் சரிதான். அந்த தேதியில் 2ம் பிரதிவாதிக்கும் Shacrusher க்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரிதான்.

19. 2ம் பிரதிவாதியை கட்சி சேர்க்கவேண்டிய காரணம் என்னவென்றால் 2ம் பிரதிவாதியின் பெயரில்தான் ஆரம்பத்தில் சொத்துக்கள் அனைத்தும் இருந்தது. வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் வாதிகளுக்கும்/எனக்கும், 2ம் பிரதிவாதிக்கும் பேச்சுவார்த்தை கிடையாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1ம் வாதியின் கணவர் பெயர் ஜமால் முகைதீன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

20. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 1ம் வாதியின் கணவர் பெயர் ஜமால் முகைதீன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணம் துபாயிலுள்ள இந்திய தூதரகத்தால் Attest செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்திய தூதரகத்தால் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை 1ம் வாதியை அடையாளம் காண்பதற்கு பரிசீலனை செய்வதற்காக

கடவுச்சீட்டை பரிசீலனை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ1 ஆவணத்தில் 1ம் வாதியின் கடவுச்சீட்டு எண், தேதி, காலவரை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதிலும் 1ம் வாதியின் கணவர் பெயர் ஜமால் முகைதீன் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் 1ம் வாதியின் கடவுச்சீட்டின் நகல் என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

21. பி.வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள 1ம் வாதியின் கடவுச்சீட்டு எண்.Z2047109 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ1ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தபசில் விவரத்தில் சொத்தின் விஸ்தீரணம் 6ஏக்கர் 50 செண்ட், அதற்கு 7 புல எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் 6 ஏக்கர் 50செண்டு அல்லாமல் அதிலுள்ள கட்டிடம், மின்இணைப்பு ஆகியவை அடங்கும் என்று தபசிலில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

22. மேற்படி 7புல எண்களில் கண்ட சொத்துக்கள் எனது பிராதில் கிடையாது என்றால் சரிதான். ஆனால் பி.வா.சா.ஆ.1 ஆவணம் மேற்படி 7 புல எண்களில் கண்ட சொத்துக்களுக்குதான் 2ம் வாதிக்கு வழக்கு தாக்கல் செய்ய அதிகாரம் வழங்கப்பட்டது என்றால் சரியல்ல, பி.வா.சா.ஆ.1ஆவணத்தில் உள்ள பத்திஎண்.6ல் To institute any suit என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள பத்தி எண்.6ல் அதிலுள்ள தபசிலுக்கு மட்டுமே பொருந்தும், வேறு சொத்துக்களுக்கு

பொருந்தாது என்றால் சரியல்ல. நான் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் வாதி முறையான அதிகாரம் எதுவும் 2ம் வாதிக்கு வழங்கியிருப்பதில்லை என்றால் சரியல்ல. எனவே 1ம் வாதியின் முகவர் 2ம் வாதி என தாக்கல் செய்திருந்த இந்த வழக்கு சட்டத்திற்கு முரணானது என்றால் சரியல்ல.

23. பி.வா.சா.ஆ.1 ஆவணம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் முத்திரை தீர்வளிக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.6 பத்தி எண்.12 ல் "Factory land already purchased" என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்திலுள்ள வாசகங்கள் எல்லாம் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தின்படி வாதிகள் தான் அலுலவக நிர்வாகத்தையும், கணக்கு வழக்குகளையும் பார்த்துக்கொள்ளவேண்டும் என அதில் கண்டுள்ளது என்றால் சரிதான். அதில் கண்டவாறு தான் வாதிகள் நடந்துவந்தார்கள். நாள்வழி கணக்கேடு, வருடவழி கணக்கேடு, உரிமைப்பத்திரங்கள் மற்றும் இதர கணக்குவழக்குகளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

24. வா.சா.ஆ.6 ஆவணத்தின்படி நிர்வாக இயக்குநர் கடன்கள் வாங்கலாம் என்றால் சரிதான். எனவே 1ம் பிரதிவாதி நிர்வாக இயக்குநர் பொறுப்பில் இருந்து சுமார் 1 கோடி வரை கடன் வாங்கியிருந்தார் என்றால் சரியல்ல.

25. இந்த வழக்கை முதன் முதலில் தாக்கல் செய்தது 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மற்ற

பிரதிவாதிகள் 1,2 பிரதிவாதிகள் வாரிசு என்ற பொறுப்பிலும், தபசில் சொத்துக்களை வழக்கிற்கு பின்பு கிரையம் பெற்றதால் அவர்களை கட்சி சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு தாக்கல்செய்யும் சமயத்தில் வழக்கிற்கு முன்பு தபசில் சொத்தில் கிரையம் பெற்றவர்களை கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

26. வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் வாதிகளுக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் இடையில் பிரச்சனை என்றால் 1ம் பிரதிவாதியுடன் மட்டுமே பிரச்சனை. எனது கட்சிப்படி கூட்டாண்மை இன்றுவரை கலைக்கப்படவில்லை என்றால் சரிதான்.

27. வா.சா.ஆ.6 பத்தி எண். 19ல் any dispute arising among the partner shall be referred to arbitrators என உள்ளது என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நான் Arbitration Conciliation Act 1996 படி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

28. பி.வா.சா.ஆ.1ல் தபசில் கண்ட 1வதுஅயிட்ட சொத்தில் கண்ட 3 ஏக்கர் 77 செண்ட் 1ம் பிரதிவாதி தனக்குரிய பிரிவின்றி 3ல் 1 பங்கை வாதிகளுக்கு 16.01.2004 தேதியில் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அதன் சார்பதிவாளர் நகல் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

29. 2ம் வாதிக்கு, நாகூர்மீரான் என்ற உடன்பிறந்த சகோதரர் உண்டு என்றால் சரிதான். நாங்கள் வாதிகளாக முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசியில் அ.வ.எண்.318/2014 என்று O.S.முகம்மது, வெள்ளைச்சாமி, காளிரத்தினம் ஆகிய மூவர்களை பிரதிவாதிகளாக கொண்டு தாக்கல் செய்த வழக்கின் பிராதின் சார்பு செய்யப்பட்ட நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வழக்கின் 1ம் பிரதிவாதியும், இந்த வழக்கின் 1ம்பிரதிவாதியாகிய O.S.முகம்மதுவால் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரை அலுவலக நகல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

30. பி.வா.சா.ஆ.6 வழக்கில் Shacrusher through its partner என்று தான் வழக்கு தாக்கல் செய்தோம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ல் கண்ட சொத்துக்களில் 1ம் பிரதிவாதி தன்னுடைய பிரிவின்றி 3 ல் 1 பங்கை அந்த வழக்கின் 2,3 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 தீர்ப்பிற்கு பிறகு வெள்ளைச்சாமி, காளிரத்தினத்திடமிருந்து அவர் 1ம் பிரதிவாதியிடமிருந்து பெற்றிருந்த சொத்துக்களை பிரிவின்றி 3ல் 1 பங்கை 2ம் வாதியின் சகோதரர் நாகூர்மீரானுக்கு கடையநல்லூர் சார்பதிவாளர் அலுவலகம் ஆவண எண்.1030/2016, நாள் 29.03.2016 கிரையம் பெற்றுவிட்டோம் என்றால் சரிதான். தற்போது பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட 6 ½ ஏக்கர் முழுவதும்

வாதிகள், வாதிகளின் சகோதரரான நாகூர்மீரான் வசம் உள்ளது என்றால் சரிதான்.

31. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட கல்உடைக்கும்இயந்திரத்தின் மதிப்பு வாங்கும் சமயத்தில் ரூ.3 லட்சம், தற்போது ரூ.10 லட்சமாக இருக்கும். மேற்படி இயந்திரம்தான் கல்களை தரம் வாரியாக உடைக்கும் என்றால் சரிதான். Shacrusher ல் 5 Conveyor belts இருந்தது என்றால் சரிதான். அதை ஓட்ட செய்வதற்கு தனி மோட்டார் வகையறாக்கள் உண்டு என்றால் சரிதான். மேற்படி 5 conveyor மதிப்புகளை என்னால் குறிப்பிட்டு கூறமுடியவில்லை. வாங்கும் காலத்தில் மேற்படி conveyor ரூ.10 லட்சம் மதிப்பு பெறும் என்றால் சரியல்ல, எனது மதிப்பு வாங்கும் காலத்தில் ரூ.1 ½ லட்சம். 7 unit தூசிகள் சேகரிக்கும் Steel tank உண்டு அதன் மதிப்பு 1 முதல் 1 ¼ லட்சம் வாங்கும் காலத்தில் இருக்கும். மின்இணைப்பு ஆலைக்கு உண்டான மின்இணைப்பு. மேற்படி மின்இணைப்பு மற்றும் சுவிட்ச் வகையறாக்கள் அமைக்கும் சமயத்தில் ரூ.50,000 மதிப்பு இருக்கும். மேற்படி இயந்திரங்கள், தளவாடங்களை பிரித்து அப்படியே வைத்துவிட்டோம். தொழில் நடக்காததாலும், 1ம் பிரதிவாதி இறந்துவிட்டதாலும் கூட்டாண்மைபுதுப்பிக்க என்ன காரணம் என்றால் கூடடாண்மையை புதுப்பிக்க வேண்டிய அவசியமில்லை, இருந்தாலும் ஏன் 2021ல் புதுப்பித்தோம் என்றால் அதற்கு குறிப்பிட்ட காரணமில்லை. இருந்தாலும் அதற்கான Renewal fee யை செலுத்தவேண்டும் என்ற காரணத்தால் செலுத்தினோம்.

32. எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் ஏன் தாவா ஏற்பட்டது என்றால் பிராது தபசில் சொத்துக்களை 1ம் பிரதிவாதி விற்றதால் தாவா ஏற்பட்டது. தௌலத் பீவியின் உண்மையான கணவர் 1ம் பிரதிவாதியின் மகனாகிய மற்றொரு O.M.சாகுல் ஹமீது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியும் 1ம் பிரதிவாதியின் மகன் O.M.சாகுல் ஹமீதும் இறக்கும்வரை இணக்கமாகவும், அணுக்கமாகவும் இருந்தார்கள் என்றால் சரிதான்.

33. crusher தொடங்கும் காலகட்டத்தில் நபார்டு மூலம் கடன் பெறப்பட்டது என்றால் சரிதான். மேற்படி shacrusher தொழில் தொடங்குவதற்கு 2ம் பிரதிவாதி மற்றும் 1ம் பிரதிவாதி அவர்கள் தவிர P.K.இஸ்மாயில் மற்றொரு செய்யது மசூதுஆகியோர்கள் அவர்களதுசொத்தை அடமானம் வைத்து நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.8,09,000/—கடன் பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி நபர்கள் தான் தென்காசி கூட்டுறவு நிலவள வங்கி அடமானப்பத்திரம் என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கடன்கள் அடைக்கப்பட்டுவிட்டது, ஆனால் அதற்கு நான் எந்த கணக்குவழக்குகளும் தாக்கல் செய்யவில்லை.

34. எனக்கும் 1ம் பிரதிவாதக்கும் இடையேயான தாவாவின் அடிப்படையில் 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்களை கூட்டாண்மை பாத்தியப்பட்ட சொத்துஎன கூறி இந்த வழக்கை வம்பாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் இருந்து கிரையம்பெற்ற மற்ற பிரதிவாதிகள் நியாயமான

உரிமை உள்ளவர்கள் என்றால் சரியல்ல. கிரையம்பெற்ற பிரதிவாதிகள் நியாயமான கிரையம் பெற்றநபர்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி நியாயமான கிரையம் கொடுத்தவர் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியையும், அவரது வாரிசுகளையும் கஷ்டப்படுத்த வேண்டும் என்பதால் பல்வேறு மனுக்களையும் தாக்கல் செய்து, நீதிமன்றத்தையும் சட்டத்தையும் தவறாக பயன்படுத்தி வம்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 35(ஏ)ன்படி நஷ்ட ஈட்டுத்தொகை வழங்க வேண்டும் என்றால் சரியல்ல.

35. 2ம் பிரதிவாதியிடமிருந்து 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கான 02.05.2002 தேதிய கிரைய ஒப்பந்தத்திலும் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் தான் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான். **மேற்படி ஆவணத்தின் அசல் பி.வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்குவிசாரணை (14ம் பிரதிவாதி தரப்பில்)**

1. வாதிகள் இருவரும் தனிப்பட்ட முறையில் வருமான வரி எதுவும் செலுத்தவில்லைஎன்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் யார் யார் பங்கு தொகை செலுத்தியுள்ளார்கள் என குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ள வா.சா.ஆ.3,4 ஆவணங்கள் தனிநபர்கள் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3,4 ஆவணங்களின்

அடிப்படையில் கிரையம்பெற்றவர் கிரையச்சொத்துக்களை தனது தனிப்பட்ட வருமானம் மூலமாக தான் கிரையம் பெற்றதாக துலங்கும் என்றால் ஆவணத்தில் அவ்வாறு தான் எழுதப்பட்டுள்ளது.

3. வாதிகள் தனிப்பட்ட முறையில் பணம் கொடுத்தார்கள் என்பதற்கு சான்று எதுவும் இல்லை என்றால் சரிதான். கூட்டாண்மை நிறுவனத்தில் இருந்து கொடுக்கப்படட பணத்தின் மூலமாகதான் வா.சா.ஆ.3,4 ஆவணங்கள் கிரையம் பெற்றதற்கு எந்த சான்றும் கிடையாது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் வாதிகள் தான் நிறுவனத்தின் கணக்காளர் என்று குறிப்பிடப்பட்டுளளது, அவ்வாறு இருக்கையில் வா.சா.ஆ.3,4 ஆவணங்களின் மூலமாக கிரையம் பெற்ற சொத்துக்கு பணம் முதலீடு கொடுத்தவிவரம் மேற்படி கணக்கில் துலங்குமா என்றால் துலங்காது.

4. வழக்கிலுள்ள 2ம் பிரதிவாதி தனதுசொந்த முதலீட்டை கொண்டுதான் வா.சா.ஆ.3,4 கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல, கூட்டாண்மையின் பணம் மூலம்தான் பெறப்பட்டது. ஆனால் அதற்கு கணக்கு வழக்குகள் கூட்டாண்மை நிறுவனத்தில் இல்லை. 2ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்களை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக்கொடுத்துவிட்டார் என்பது வா.சா.ஆ.5ல் துலங்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ 5 ஆவணத்தை பரிசீலனை செய்தாலும் அதில் நிறுவனச்சொத்துக்கள் குறிப்பில்லை என்றால் சரிதான், அதில்அவரது தனிப்பட்ட சொத்துக்கள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நாள்வழி கணக்கேடு, வருடவழி கணக்கேடு, உரிமைப்பத்திரங்கள்

மூலம் வழக்குசொத்துக்கள் நிறுவனத்திற்கு பாத்தியப்பட்டதாக துலங்காது என்றால் வா.சா.ஆ.1 ஆவணம் மூலம் துலங்கும்.

5. இ.ம.எண்.20/2025 கட்சி சேர்க்கக்கோரிய 15 வது எதிர்மனுதாரர் வழக்கிடை சொத்தில் ஒரு பகுதியை பிராதில் கண்டபடி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை பொறுத்து 50 க்கும் மேற்பட்ட வில்லங்கங்கள் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 14 ம் பிரதிவாதி வழக்குசொத்தின் ஒருபகுதியை கிரையம் எழுதிபெற்றுள்ளார் என்றால் சரிதான்.

6. இந்த வழக்கின் 12 முதல் 14 பிரதிவாதிகள் வழக்கு சொத்துக்களை கியைரம் வாங்கியிருப்பதாக கூறி கட்சிசேர்த்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் செல்லாது என பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான். எனது கட்சிப்படி நான் கோரியுள்ள நிரந்தர தடையாணை பரிகாரம் அற்றுபோய்விட்டது என்றால்சரியல்ல. எனது வழக்கு 14 ம் பிரதிவாதியை பொறுத்து நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

7. இனிமேல்கொண்டு கூட்டாண்மை நிறுவனம் தொடர்ந்து நடக்கும் நிலைப்பாடு இல்லைஎன்றால் சரியல்ல. எனது வாக்குமூல விவரப்படியே வாதி செய்துவந்த தொழிலானது வழகது தேதியிலே நிறுத்தப்பட்டுள்ளதாக நான் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் இனிமேற்கொண்டு மேற்படி தொழில் தொடர்ந்து நடத்தமுடியாது என்றநிலைப்பாடு உள்ள நிலையில் வா.சா.ஆ.1 ன்படி உருவாக்கப்பட்ட

நிறுமம் சட்டப்படி கலைக்கப்பட்டதாக கருதப்படும் என்றால் சரியல்ல. எனவே எனது பிராதில் 2 வது பரிகாரம் அற்றுபோய்விட்டது என்றால் சரியல்ல.

8. வழக்குசொத்துக்கள் கடையநல்லூர் தாலுகா, கம்பனேரி புதுக்குடி பகுதி–1 கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது வழக்குவிவரத்தில் கடையநல்லூர் கிராமத்தில் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், அது தட்டச்சு பிழை. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**4, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.